

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.2.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் மகளிர் நலனை மேம்படுத்திடும் வகையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் தயாரிக்கப்பட்ட "தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024 –ஐ வெளியிட்டார்கள். இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நலத்துறை ஆணையர் திருமதி வே.அமுதவல்லி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.2.2024) தலைமைச் செயலகத்தில், பொதுத்துறை சார்பில் சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில் 17 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள 59 அறைகள் கொண்ட அரசு ஓய்வு இல்லத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொதுத்துறை செயலாளர் கே.நந்தகுமார், மற்றும் பொதுத்துறை துணைச் செயலாளர் (மரபு) திருமதி ஜெ.இ. பத்மஜா, ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேர்வாய்க் கண்டிகையிலிருந்து ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்!

மீஞ்சூர் பகுதியில் நல்ல குடிநீர் வழங்கும் திட்டம் விரைவில் நிறைவேறும்!

சட்டப்பேரவையில் அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!

சென்னை, பிப்.22-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

துரை சந்திரசேகரன்: பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், சீமாவரம் ஊராட்சிக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

கே.என். நேரு: திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதிக்குட்பட்ட சோழவரம் ஊராட்சி ஒன்றியம், சீமாவரம் ஊராட்சியில் சீமாவரம், சின்ன சீமாவரம் மற்றும் சீமாவரம் காலனி ஆகிய 3 குடியிருப்புகள் உள்ளன. இக்குடியிருப்புகளுக்கு, தனி மின்விசை திட்டங்கள் மூலம், தற்போது ஊரக வளர்ச்சித் துறைமூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, சீமாவரம் ஊராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தும் கருத்துரு இப்போது புதிதாக வந்திருக்கிறது. விரைவில் அதை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

துரை. சந்திரசேகர்: மீஞ்சூர் சுற்றுவட்டார கிராமங்களான அத்திப்பட்டு, வள்ளூர், தந்தியம்பாக்கம், மேலூர் போன்ற கிராமங்களில் குடிநீர் பிரச்சினை மிக அதிமாகக் காணப்படுகிறது. இதற்கெல்லாம் தங்களிடம் ஒரு விரிவான திட்டம் இருந்தால், மக்களின்

நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்படுமா?

அமைச்சர் கே.என். நேரு: உறுப்பினர் கேட்டது தொடர்பாக ஏற்கெனவே, ஒன்றியத்தின் பெருந்தலைவர் மற்றும் அந்தப் பகுதியில் இருக்கிறவர்கள் எல்லாம் வந்திருந்தார்கள். மீஞ்சூர் பகுதி முழுவதும் குடிநீர் உப்பாக இருக்கிறது. எவ்வளவு தண்ணீர் கொடுத்தாலும் உப்பாக இருக்கிறது. எனவே, புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் ஒன்று துவங்கப்பட வேண்டும் என்று கேட்டார்கள். நான் அதிகாரிகளிடம் கலந்துபேசியபோது, மீஞ்சூரில்தான் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் முதன்முதலில் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட திட்டம் அங்கிருக்கிறது; அந்தத் திட்டத்தில், 100 MLDக்கு அங்கு இருக்கிற ஒப்பந்தக்காரர் சரியாக இல்லாததால், இப்போது 40, 50 MLD தான் அதிலிருந்து தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. நாங்கள் அதிகாரிகளிடம் சொல்கிறபோது, புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் துவங்குவதைக் காட்டிலும், அந்தப் பகுதிக்குத் தேவையான மொத்த குடிநீர் எவ்வளவு என்று கேட்டபோது, 8.5 MLD இருந்தால் போதும் என்று சொன்னார்கள். அங்குள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திலிருந்து, pipe line மூலம் இணைப்பு கொடுத்து மீஞ்சூருக்கு முழுவதுமாக தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று அதிகாரிகளிடம் சொன்னோம். அதிகாரிகளும் ஆய்வு செய்து எடுத்தவுடன் 8 MLD கொடுக்க இயலாது, முதலில் ஒரு 4 MLD கொடுக்கலாம் என்று எங்கள் துறையினுடைய Metro MD அவர்களும், நம்முடைய அமைச்சர் இ. பெரியசாமி அவர்களுடைய துறையின் செயலாளர் அவர்களும், அதேபோல அங்கே இருக்கிற MD மற்றும் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் மூன்று பேரும் பேசி 4 MLD கொடுக்கலாம், விரைவில் ஏற்பாடு செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்ததாக, தேர்வாய்க்கண்டிகையிலிருந்து ஒரு புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் அந்தப் பகுதிக்குக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு இருக்கிறது. எனவே, இந்த ஆண்டு சட்டமன்றத்திலேயே அறிவிக்கின்ற போது, மீஞ்சூர் பகுதிக்கு நல்ல குடிநீர் வழங்குவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

துரை. சந்திரசேகர்: அமைச்சர் அவர்களின் விரிவான பதிலுக்கு மிக்க நன்றி. ஏனென்றால்; முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டு, இப்போதைய முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட இந்தத் திட்டம், முழுமையாக மக்களுக்குச் சென்றடைய வேண்டுமென்றால், இந்த ஆட்சியைவிட்டால் வேறு யாரும் செய்து கொடுக்க மாட்டார்கள். ஆகவே, நிரந்தரமாக இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் கே.என். நேரு: திருவள்ளூர் மாவட்ட பொறுப்பு அமைச்சராக உள்ள ஆர். காந்தி அவர்கள்தான் என்னிடம் மீஞ்சூர் பகுதிக்கு கடல்நீரை குடிநீராக்கி வழங்க வேண்டுமென்று முதலில் கோரிக்கை வைத்தவர். மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சீமாவரம் ஊரக குடியிருப்புகளுக்கு உடனடியாக காட்டுப்பள்ளி கடல்நீரை குடிநீராக்கும் ஆலையிலிருந்து 4 MLD குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்தப் பகுதிக்கு நல்ல தண்ணீர் வரும். உங்கள் நன்றியை அமைச்சர் காந்தி அவர்களுக்குச் சொல்லுங்கள்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

தலைமை : எஸ்.சசிகுமார் - திரு.வி.க நகர் தெற்கு பகுதி 76வது வட்டத்தில்

400 அப்பளத் தொழிலாளர்களுக்கு நல உதவிகள் வழங்கும் விழா!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா சிறப்புரை!

சென்னை, பிப். 22-

திரு.வி.க.நகர் தெற்கு பகுதியில் 400 அப்பள தொழிலாளர்களுக்கு நல உதவிகள் வழங்கும் விழா இன்று (22.02.2024 - வியாழக்கிழமை) மாலை 4 மணியளவில் செல்லப்பா தெரு, ஓட்டேரி சென்னை - 600012 இல் நடைபெறுகிறது.

இதில் 76வது வட்டக் கழகச் செயலாளர் எஸ்.சசிகுமார் தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு

வழக்கறிஞர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. , திரு.வி.க.நகர் தெற்குப் பகுதிச் செயலாளர் எம்.சாமி கண்ணு, திரு.வி.க.நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன், சரிதா மகேஷ்குமார் எம்.சி., இசட் ஆசாத் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

புனிதவதி எத்திராசன் எம்.சி., டி.லோகேஷ் லயன் பி.உதயசங்கர், நா துலுக்காணம், எம். பெரோஸ் கான், தமிழ் செல்வி சசிகுமார் எம்.சி., ரமணி லோகேஷ், மு.சரவணன் எம்.சி., பி.ஜே.துரை சிங்கம், கருணாநிதி, அ.கோவிந்தன், சுகுமார், வனஜா சண்முகம், த.கருணாநிதி, வே.து.தாமரைச் செல்வம், ர.கலைவேந்தன், அ.கதிரவன், எல். சுப்பிரமணி, ஓட்டேரி ஆர்.சூரி, வீரமணி, நெல்லை மா.முத்தையா, இ.நாகலிங்கம், எம்.திவாகர், கனல் கங்கா பட்டா (எ) எஸ்.எல்.நாராயணன். எப்.அபு, ஈஸ்வரி கண்ணன், வழக்கறிஞர் அ. சேதுராமன், பி.புகழ் செந்தில், ரா.சுரேஷ், ராபர்ட் ஜான், சி.எம்.மணிகண்டன், கே.எம்.கார்டன் சத்தியா, பா.பி.தாஸ், சாவித்திரி அன்பழகன், கோ.கருணாகரன், ஏ.ஜி. எஸ்.கோல்டு ஜி, புல்லட் என்.பாஸ்கர் இரா.தனசேகர், அ.மகேஷ்

தெற்குப் பகுதி வட்டக் கழகச் செயலாளர்கள் வி.க.வெங்கடேசன், எம். தமீம், டெல்து (எ)டி. சுரேஷ்

400 அப்பள தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்கள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா

மேயர் ஆர். பிரியராஜன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., அ.வெற்றிஅழகன் எம். எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ.,

ஜி.ஏழுமலை, ஆ.குருமூர்த்தி, ரா.ஞான சௌந்தரி, கே.முருகா, என்.எம். செந்தில் சரவணன், கே. முரளி (எ) குள்ளா, டி.நீதி தேவன், வி.டில்லிராஜ், பி.மலர்

டி.செந்தில் விஜி, ஆர். கார்த்திகேயன், எஸ்.மணி மேகலை, பிரியா சுரேஷ், எஸ்.கவிதா, லோ.கதிரவன், ஜே.பிரகாஷ், வி. செந்தில் குமார், நாடார் எம்.சீனிவாசன், எஸ். ராஜேஷ், எஸ்.நரேந்திரன், வழக்கறிஞர் சுரேஷ், தருண் ஜெயபால், கிஷோர் கண்ணன், ஆ. அஜித், என்.கஜேந்திரன், என்.திலிப் குமார், எம். ஹரிதாஸ், ஏ.கே.பரணி குமார், ஆர்.பிரகாஷ், எம். யுவராஜ், எம்.ஜெயபால், கே.புருஷோத்தமன்

நன்றியுரை: 76 அ வட்டக் கழகச் செயலாளர் எஸ்.வெங்கடேசன்

அமைச்சர் பி.கே. சேகர்பாபு - தயாநிதி மாறன். எம்.பி. முன்னிலை - பி. ஸ்ரீராமுலு தலைமை!

துறைமுகம் தொகுதியில் கழகத் தலைவர் பிறந்தநாள் விழா!

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பங்கேற்பு!

சென்னை, பிப். 22-

'ஸ்ரீ பாதம் தாங்கும் பக்தர்கள்! திராவிட முதல்வரின் சொந்தங்கள்' என்ற தலைப்பில் இன்று (22.02.2024 - வியாழக்கிழமை) மாலை:4.00 மணியளவில் இராஜா அண்ணாமலை மன்றத்தில், சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் மேற்கு பகுதி 59 வது வட்டத்தில் கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் பிறந்தநாளையொட்டி சூரிய தொடர் 3. ஸ்ரீபாதம் தாங்கும் பக்தர்கள். திராவிட முதல்வரின் சொந்தங்கள் என்ற வகையில் 250 நபர்களுக்கு நலதிட்டம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி. கே.சேகர்பாபு .கழக உயர் நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன். எம்.பி, துறைமுகம் சட்டமன்றத் தொகுதி

தேர்தல் பொறுப்பாளர் க.பிரபு, பகுதிசெயலாளர் கள் எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், ஜி.எம். தேவன். எம்.விஜயகுமார்.இசட். ஆசாத்.என்.பி.எம்.ஷேக் அப்துல்லா. ஆர்.கலைச் செல்வி, எம். விநாயகம், பி. விஜயகுமார், பா. ஜெகதீஷ், எல். சம்பத்குமார், பா. பிரதீப் குமார் ஆகியோர் முன்னிலையில், மே. ஜனார்த்தனன், கே.ஆர். அபரஞ்சி, ந. சுந்தரம், எஸ். சந்தியாகு, செ. தமிழ்வாணன், வி. சந்தான லட்சுமி, சி.ப. ஜெயராமன், வட்டக்கழக செயலாளர்கள் ப.கதிரவன், எம். ஜெய்சங்கர், ஆர். ரவிச்சந்திரன், ஜி. ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை, எல். சத்யநாராயணன், எஸ். புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி. கதிரவன், கே. கவியரசு, ஆ.நா. பார்த்திபன். மாமன்ற உறுப்பினர்கள்: வெ. பரிமளம், ராஜேஷ் ஜெயின், எல். நவீன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

250 ஸ்ரீ பாதம் தாங்கும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குபவர் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வி மெய்யநாதன் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சியின் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: பா.தாயகம் கவி, அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேலு மற்றும் மாநில நிர்வாகிகள் மாவட்ட பகுதி கழக வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்கின்றனர்

நன்றியுரை வட்டச் செயலாளர்கள் டி. சதீஷ்குமார். சேப்பாக்கம் வே.பா. பிரபாகரன்.

சென்னை தெற்கு மாவட்டம் திமுக இளைஞரணி சார்பில் 2வது மாநில மாநாடு தீர்மான விளக்க தெருமுனைக் கூட்டம் சைதாப்பேட்டை, கொத்தவால்சாவடி தெருவில் மாவட்டதுணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் தலைமையிலும், ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ, பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி, வட்டக் கழக செயலாளர்கள் எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், பேச்சாளர் சே.ம.மதிவதனி ஆகியோர் சிறப்புரையாற்றினர். எஸ்.குணசேகரன், மின்னல்கந்தப்பன், தா.மோகன்குமார் எம்.சி, வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி, வாசுகிபாண்டியன், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.